**Minutes of the Meeting of Public Hearing held on 10.06.2010 at 11.00 AM regarding Cheyyur Ultra Mega Power Project (4000 MW) at Cheyyur Village, Kancheepuram District**

**Present**

1. **District Collector, Kancheepuram District**
2. **District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Maraimalai Nagar**

District Revenue Officer, Kancheepuram District welcomed the Gatherings.

District Environmental Engineer, Maraimalai Nagar welcomed the public and requested the District Collector, Kancheepuram District to conduct the Public Hearing and invite the public to offer their views, after the presentation made by the Project Proponent.

District Collector, Kancheepuram District welcomed the Gatherings and briefed the Public Hearing procedure as stipulated in the EIA Notification 2006 and requested the Project Proponent to make a presentation and then, requested the public to register their views in precise and clarity. Further stated that opportunity will be given to each and everyone.

**Mr. Ganapathy Sankar, Superintending Engineer, TNEB., Chennai**

Briefed the project through power point presentation with the help of LCD projector in the following lines.

- Need for the Project
- Salient features of the project scenario
- Benefits of the project
- Site suitability study
- Present Environmental Scenario
- Environment impact assessment
- Environmental Management Plan
- Ash Handling and disposal
- Socio Economic aspects

**1. Thiru . Maduraiveeran, Ex Panchayat President , Chitharkadu**

We are affected due to acquisition of land which is essential for our livelihood. Compensation for the land acquisition to be fixed as per Market rate instead of Government Guideline value, for which the higher official who take necessary action in this record .90% of the people depending upon agriculture and only 10% educated and being unemployed. Hence employment has to be given to the unemployed educated youths and to provide basic amenities for our livelihood otherwise we will oppose the project.

**2. Thiru. Sekhar, Edaikazhinadu**

We learnt that it is a prestigious thermal power project, hence we hope that all the measures will be implemented as per the project report failing which this area will become graveyard, further alternate land to be allotted for the land acquired for the project. Employment to be given to educated as well as qualified persons in the project area.

**3. Thiru. D. Babu, Chairman Cheyyur Village Panchayat**

We welcome the establishment of the 4000 MW Ultra Mega power Project at Cheyyur. Since our village is not located either in GST Road or in East Coast Road, no development has been achieved so far. Further I register that this project will lead further development in Cheyyur area as well as overcome the Power deficit in the state in future.

**4. Thiru. Pon Ramlingam, Devarajapuram**

This National Power Project will overcome the power deficit and lead the growth of many industries in the state. Hence I welcome the project.

**5. Thiru. M. Jeeva, Coastal Action Network, Chennai-15**

We condemn the conduct of village special gramasabha meeting in this village during the conduct of public hearing meeting for the project on the same day. Further conduct of public hearing is not correct since the enquiry on land acquisition for the project is under progress and also stated the following.

1. Saving of 30% Electricity loss during transmission by TNEB could avoid the setting up of such thermal power project.
2. Solar energy may be utilized to generate electricity instead of relying on thermal energy.
3. Setting up of thermal power plant was technically outdated in the European and American Countries. Hence establishment of such thermal power plants in our country is incorrect.
4. During rainy season, ash generated will be washed away and affect the agricultural lands nearby.
5. Discharge of waste water into sea will affect the fishing wealth.
6. This project will affect the salt pan, fishing, agriculture activities ,hence the project should be dropped.

**6. Thiru. S. Perumal, Pondur**

Ash generated from the project will affect the agriculture and the environment. Further there is no employment opportunities to the local people. Hence I oppose the project.

**7. Thiru. Kathirvel, President, Amanthankarnai village panchayat**

The project affects the bird's life in the Cheyyur marsh area. The project will have an impact on water, air and aquatic system. Further acquisition of grazing land will affect the livestock population and questioned that whether one third of the power generated from this project will be supplied to this area ?

Since the project will degrade the environment, I oppose the project.

**8. Dr. R. S. Paul Mohan, Kanniyakumari**

Sulphurdioxide emission from the Thermal power plant will lead to acid rain, which will affect the agricultural and salt pan activities. Hence the project to be dropped.

**9. Thiru. Ponnivalavan, Cheyyur**

I welcome the project in this area. Ash generated from the project should be handled safely and disposed. Further, employment should be given to each family in this area accounting 60% of the total employment and rest 40% to be given to the public of Kancheepuram District.

**10. Thiru. Dakshinamoorthy, AIADMK Agriculture Association, Devarajapuram**

For the sake of power requirement giving false statistics on land acquisition is incorrect. Land acquired for the project should be compensated as per market rate and to be settled in one time payment. Further insisted to generate hydro power and not relying on thermal energy. Then questioned that whether proper employment will be given to the local public who have given land for the project.

**11. Thiru. Raja Devarajapuram, Cheyyur**

We welcome this project in this area. Employment should be given to Land owners and salt pan workers. The project should be implemented without any impact to environment.

**12. Thiru K. Raguraman, Cheyyur.**

Welcomed the project. Employment opportunities is to be given to the educated youths. Fisherman community and proper compensation to be paid to the land owners. Basic amenities to be provided in this area.

**13. Tmt.Tamilini, Chitharkadu**

We object to the project, since the Government is acquiring, even small pieces of land from the dalit people for this project.

**14. Thiru. Moorthy, Cheyyur**

Proper employment has to be given to the land owners, educated youths and to the salt pan workers.

**15. Thiru. V. Veeran, Vada Cheyyur.**

Salt Pan Activity will be ruined due to the project.

**16. Tmt. Josphine, Devarajapuram**

Agriculture, Salt pan, fishing activity will be affected due to this project. Cheyyur area will become another Bhopal when the project is implemented.

**17. Tmt. Dillibai, Women Agriculture Union**

Ash generated from this project will affect the agricultural activity and the discharge of hot water into the sea will affect fishing wealth and hence the project may be dropped.

**18. Thiru. Thiruvenkadam, Devarajapuram**

Welcomed the project, as it will develop this backward area and generate employment for the poor.

**19. Thiru. Chitrarasu, Palaiyur.**

Large extent of land is being acquired for this project in Thannerpanthal. Land should be acquired atleast 500 meter away from the habitation area. Proper compensation has to be given to the land owners. Providing basic amenities like Road, Medical facility, drinking water supply should be done for agriculture community.

**20. Thiru. Murali, Cheyyur**

The project will be successful one if they provide basic amenities like health, infrastructure, education, water supply facilities for this area.

**21. Tmt. Jesuratinam, Coastal Action Network, Nagapatinam.**

Project Proponent has furnished false data regarding water usage and meteorological data in the Rapid Environmental Impact Assessment. Further EIA is silent on coal handling and port area for import of coal . Hence environmental clearance should not be given to this project and the project may be dropped.

**22. Thiru. Arunachalam, Environmentalist**

REIA report was prepared in urgent manner without providing any scientific proof. This project will affect the environment and it is cheating the public.

**23. Tmt. Sasikala, Chennai.**

This project will affect the livestock wealth, fishing activities and hence we oppose the project.

**24. Tmt. Gowri, Kadapakkam**

This project will affect fishing activities and agricultural activities in the Edaikazhinadu. Hence we oppose the project.

**25. Thiru. Gowrilingam, Injampakkam.**

This project will have heavy impact on the fisherman communities and lead to sea erosion. Such sea erosion will affect Kalpakkam Nuclear Power Plant area. Hence we oppose the project.

**26. Tmt. Usharani**

This project will affect agricultural activities. Hence we oppose the project.

**27. Thiru. Gopi Bannerjee, Pondicherry**

Ecological sensitive area was selected for locating the project. Sea water intrusion will make the agricultural land infertile. Hence the project has to be relocated. The EIA is silent on the port and coal handling activities.

**28. Tmt. Gandhimathi, Coastal Action Net Work**

This project will affect the Cheyyur back water area which is enroute for the birds to Vedanthangal bird sanctuary and also cause food insecurity to the local people. REIA is silent on the coal handling, port activities and SEZ area hence we oppose the project.

**29. Tmt. Vennila, Kancheepuram**

During the execution of the project, dredging will be carried out in the sea which will have impact on the fishing community hence we oppose the project.

**30. Thiru. R.K.Elango, Kancheepuram**

This project will affect the agricultural activities. Hence we oppose the project.

**31. Thiru. Arungunam Vinayagam**

This project will affect the salt pan activities and agricultural activities in Edaikazhinadu. Acquisition of grazing land will affect the livestock wealth. Hence I requested to execute the project in Kovalam area in Chennai. Since the project is affecting the environment, we oppose the project.

**32. Thiru. Ramesh, Devarajapuram**

Welcomed the project and requested to execute the project without affecting the environment.

**33. Thiru. Saravanan, Cheyyur**

We the local people welcome the project, only outsiders are objecting the project and requested to give job opportunity to local people.

**34. Thiru. Sundaramurthy,**

We welcome the project and requested to provide food, alternate shelter to make livelihood comfortable.

**35. Thiru. Ramalingam, Vedal**

Adequate compensation has to be given to the land owner and while acquiring temple land, suitable alternate land has to be allotted.

36. **Thiru. Senthil, Edaikzhinadu**
    Welcomed the project as it is giving employment.

37. **Thiru. Madhanprasad, Vada Cheyyur**
    We welcome the project if proper employment is given.

38. **Thiru. Jerome, Cheyyur**
    Welcomed the project and requested adequate compensation to land owners.

39. **Tmt. Indira**
    We oppose the project.

40. **Thiru. Balu**
    Requested to give employment opportunity to the educated unemployed youths.

Finally, District Collector, Kancheepuram District, informed that the views expressed by the Public have been recorded and concluded the meeting.

The attendance register of the participants, their written submissions (284 Numbers) and recorded video coverage of Public Hearing in compact disc are appended herewith.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Maraimalai Nagar, Kancheepuram District.**

**District Collector,**
**Kancheepuram District.**

**<u>10.06.2010 அன்று காலை 11.00 மணியளவில் செய்யூர் அதி நவீன மிகுமின் ஆற்றல் திட்டம் (4000 மெகாவாட்), செய்யூர் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம், பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை</u>**
**கூட்டக் குறிப்புரை**
**முன்னிலை**

1. **மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்**
2. **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலை நகர்**

மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை இந்த பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தினை நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், திட்ட முனைவோர் திட்டம் குறித்து விளக்கமளித்தவுடன், பொது மக்கள் தங்கள் கருத்தினைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசியதோடு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ல் வரையறுத்துள்ள பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடைமுறைகளை விவரித்தார். திட்ட முனைவோர் இத்திட்டம் குறித்து விளக்கம் அளித்தவுடன், கருத்து தெரிவிக்க விரும்புவோர் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கருத்து தெரிவிக்க வாய்ப்பளிப்பதாக கூறினார்.

திரு. கணபதி சங்கர், கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை அவர்கள் இத்திட்டத்தின் செயல்முறை விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தார்.

- திட்டத்தின் தேவை

- ➢ திட்டத்தின் முக்கிய அம்சங்கள்
- ➢ திட்டத்தின் பயன்பாடு
- ➢ திட்டத்திற்கு தகுந்த இடம் பற்றிய ஆய்வு
- ➢ தற்போதைய சுற்றுச்சூழல் விவரம்
- ➢ சுற்றுச்சூழலின் தாக்கம்
- ➢ சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்
- ➢ சாம்பல் கையாளுதல் மற்றும் வெளியேற்றம்
- ➢ சமூக–பொருளாதார விவரம்

**1. திரு. மதுரை வீரன், சித்தார்காடு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்**

எங்களுடைய வாழ்வு ஆதாரமாகிய நிலங்களை எடுத்ததால், நாங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறோம். இதற்கு மேலதிகாரிதான் எதாவது மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். நிலத்திற்கு நஷ்டஈடு அரசு மதிப்புக்கு பதிலாக மார்க்கெட் மதிப்பு தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்பகுதியில் 90 சதவீத மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். 10 சதவீத மக்கள்தான் படித்த இளைஞர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஆவண செய்ய வேண்டும். மேலும், நாங்கள் வாழ்வதற்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்த தர வேண்டும். இல்லையெனில் இந்த அனல் மின் திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

**2. திரு. P. சேகர், இடைகழி நாடு**

இந்த அனல் மின்நிலையம் மிக பெருமை வாய்ந்ததாக கூறப்படுகிறது. எனவே திட்ட அறிக்கையின்படி அனைத்து அம்சங்களையும் முறையாக செயல்படுத்த வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காத முறையில் சுடுகாடாக மாறும் என்பது என் கருத்து. மேலும் பட்டதாரிளுக்கு மட்டும் இல்லாமல் ஏனைய இளைஞர்களுக்கும், தகுதியுடையவர்களுக்கும் வேலை வாய்ப்பு தர வேண்டும்.

**3. திரு. து. பாபு, செய்யூர் ஊராட்சி மன்ற தலைவர்**

4000 மெகாவாட் அனல்மின் திட்டம் எங்கள் ஊரில் அமைய நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். செய்யூர் ஜி.எஸ்.டி. சாலையிலோ அல்லது கிழக்கு கடற்கரை சாலையிலோ அமையாததால் இதுவரை எந்த வளர்ச்சியும் அடையவில்லை. இந்த அனல் மின் திட்டம் இந்த ஊரை வளர்ச்சி அடைய வழி வகை செய்வதோடு மின் பற்றாகுறையையும் நிவர்த்தி செய்யும் என பதிவு செய்கிறேன்.

**4. திரு. பொன்ராமலிங்கம், தேவராஜபுரம்**

இந்த தேசியமின் திட்டம் தற்போது உள்ள மின் பற்றாகுறையை போக்கி மேலும் தொழிற்கூடங்கள் முன்னேற்ற பாதையில் செல்ல வாய்ப்புள்ளது என்பதால் இத்திட்டத்தை ஆதரிக்கிறேன்.

**5. திரு. எம். ஜீவா, கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு, சென்னை–15**

இத்திட்டம் தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் இன்று இந்த ஊரில் சிறப்பு கிராம சபை கூட்டத்தை கூட்டியதை வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக விசாரணை நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் இக்கூட்டத்தை நடத்துவது சரியல்ல.

இத்திட்டம் தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்தார்.

1. தமிழ்நாடு மின்சார வாரியமானது மின் கடத்தி கம்பிகள் வழியே கசியும் 30 சதவீத மின்சாரத்தை சேமித்தாலே இத்தகைய அனல்மின் நிலையத்தை நிறுவ தேவையில்லை.
2. அனல் மின் திட்டத்திற்கு மாற்றாக சூரிய ஒளி சக்தியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாம்.
3. ஐரோப்பியா மற்றும் அமெரிக்க நாடுகளில் தொழில்நுட்ப ரீதியாக நிராகரிக்கப்பட்ட அனல் மின் திட்டத்தை நம் நாட்டில் செயல்படுத்துவது சரியல்ல.
4. மழைக்காலங்களில் சேமித்து வைக்கும் சாம்பலானது மழைநீரில் அடித்து செல்லப்பட்டு விலை நிலங்கள் பாதிக்கப்படும்.
5. கையகப்படுத்தப்படவுள்ள நிலத்திற்கு மார்க்கெட் விலை நிர்ணயிக்கப்படவில்லை.
6. கழிவுநீரை கடலில் விடும் பட்சத்தில் மீன்வளம் பாதிக்கும்.
7. இத்திட்டத்தினால் உப்பளங்கள், விவசாய நிலங்கள் மற்றும் மீன் வளம் பாதிப்பதினால், இத்திட்டத்தை இரத்து செய்ய வேண்டும்.

**6. திரு. பெருமாள், போந்தூர்**

இத்திட்டத்தினால் உருவாகும் சாம்பல் கழிவானது காற்றில் கலந்து விவசாயம் மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்கும். எனவே, இத்திட்டத்தை கண்டிக்கிறேன். மேலும், இத்திட்டம் செயல்படும் சமயத்தில் உள்ளூர் மக்களுக்கு போதிய வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு இல்லாததால் இத்திட்டத்தை எதிர்க்கிறேன்.

**7. திரு. கதிர்வேல், ஊராட்சி மன்ற தலைவர், அமந்தங்கரணை**

இத்திட்டமானது செய்யூர் கழுவேலிப் பகுதியில் பறவகைகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும். மேலும், இத்திட்டம் நீர், காற்று மற்றும் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். இத்திட்டத்திற்காக மேய்ச்சல் நிலத்தை கையகப்படுத்துவதால் கால்நடை வளம் பாதிக்கும். மேலும், இத்திட்டம் செயல்படுத்தும்பட்சத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மூன்றில் ஒரு பங்கை இப்பகுதிக்கே வழங்க முடியுமா என வினவினார். ஆகவே, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் இத்திட்டத்தை எதிர்க்கிறேன்.

**8. திரு. டாக்டர். ஆர்.எஸ். பால்மோகன், கன்னியாகுமரி**

ஆனல்மின் நிலையத்திலிருந்து உருவாகும் கந்தக–டை–ஆக்சைடு, அமில மழையாகப் பொழிவதால் விவசாயமும், உப்பளங்களும் பாதிக்கும். எனவே, இத்திட்டத்தை கைவிட வேண்டும்.

**9. திரு. பொன்னி வளவன், செய்யூர்**

இந்த பகுதியில் இத்திட்டம் அமைய வேண்டும். இத்திட்டத்தினால் உருவாகும் சாம்பல் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட வேண்டும். மேலும், வீட்டிற்கு ஒருவர் என 60 சதவீதம் இந்த பகுதி மக்களுக்கும், 40 சதவீதம் காஞ்சிபுர மாவட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க ஆவண செய்ய வேண்டும்.

**10. திரு. தட்சணாமூர்த்தி, மாவட்ட அ.இ.அ.தி.மு.க. விவசாயிகள் சங்க செயலாளர், தேவராஜபுரம்.**

மின் தேவையை கருதி நிலம் கையகப்படுத்தும் புள்ளி விவரங்களை தவறாக தெரிவிப்பது சரியல்ல. கையகப்படுத்தும் நிலங்களுக்கு மார்க்கெட் விலையில் நிர்ணயம் செய்து ஒரே தவணையில் பணத்தை வழங்க வேண்டும். அனல் மின் உற்பத்திற்கு பதிலாக நீர் மின் திட்டங்களை செயல்முறைபடுத்தலாம். இத்திட்டத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு தக்க வேலைவாய்ப்பு வழங்க முடியுமா என வினவினார்.

**11. திரு. இராஜா, தேவராஜபுரம்**

இந்த பகுதியில் அனல் மின் நிலையம் ஆரம்பிக்க முழுமையான ஆதரவு தருகிறோம். நிலம் கையகப்படுத்தும்போது நில உரிமையாளருக்கும், உப்பள தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். எந்த பாதிப்பும் இல்லாமல் இத்திட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

**12. திரு. கே. இரகுராம், செய்யூர்**

இத்திட்டத்தை வரவேற்கிறோம். படித்த இளைஞர்களுக்கும் மீனவ சமுதாய மக்களுக்கும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். இப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

**13. திருமதி. மு. தமிழினி, சித்தார்காடு**

குறைந்த அளவில் நிலத்தை சொந்தமாக கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து, இத்திட்டத்திற்காக அரசு நிலங்களை கையகப்படுத்துவதால் இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**14. திரு. மூர்த்தி, செய்யூர்**

இத்திட்டத்திற்காக நிலம் அளிப்பவர்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் மற்றும் உப்பள தொழிலாளருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**15. திரு. வி. வீரன், வட செய்யூர்**

உப்பள ஆதாரம், இத்திட்டத்தினால் அழியும் நிலை ஏற்படும்.

**16. திருமதி. ஜோஸ்பின், தேவராஜபுரம்**

விவசாய உற்பத்தி, உப்பள தொழில், மீன்பிடி தொழில் ஆகியவை இத்திட்டத்தால் பாதிப்புக்கு உள்ளாகும். இத்திட்டம் செயல்படுத்தும் பட்சத்தில் செய்யூர் பகுதி மற்றுமொரு போபாலாக மாறும்.

**17. திருமதி. டில்லிபாய், பெண்கள் விவசாயிகள் சங்கம், காஞ்சிபுரம்**

இத்திட்டத்தில் உருவாகும் சாம்பல் சுற்றியுள்ள விவசாய நிலங்களை பாதிக்கும். மேலும், கொதிநீரை கடலில் கலப்பதினால் மீன் வளம் பாதிக்கும். எனவே, இத்திட்டத்தை கைவிட வேண்டும்.

**18. திரு. திருவேங்கடம், தேவராஜபுரம்**

இந்த திட்டமானது பிற்படுத்தப்பட்ட இப்பகுதியின் வளர்ச்சிக்கும் மற்றும் ஏழை–எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தரும் திட்டம் என்பதால் இத்திட்டத்தை வரவேற்கிறோம்.

**19. திரு. சிற்றரசு, பாளையூர்**

தண்ணீர்பந்தல் பகுதியில் இத்திட்டத்திற்காக அதிகப்படியான விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. குடியிருப்பு பகுதியிலிருந்து குறைந்த பட்சம் 500 மீட்டர் தள்ளி நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு உரிய நஷ்டஈடு கொடுக்க

வேண்டும். மேலும், விவசாய மக்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை வசதி, மருத்துவ வசதி, குடிநீர் வசதி போன்றவைகளை செய்து தர வேண்டும்.

**20. திரு. முரளி, செய்யூர்**

அடிப்படை வசதிகளான சுகாதாரம், கட்டமைப்பு, கல்வி, குடிநீர் போன்ற வசதிகளை செய்து கொடுத்தாலே இத்திட்டம் சிறப்பாக நிறைவேறும்.

**21. திருமதி. ஜேசுரத்தினம், கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு, நாகப்பட்டினம்**

தொழில் முனைவர், விரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் வானிலை மற்றும் நீர் உபயோகம் தொடர்பான தவறான தகவல்களை அளித்துள்ளார். மேலும், நிலக்கரியை கையாளும் முறை மற்றும் நிலக்கரி இறக்குமதி செய்யவிருக்கும் துறைமுகப்பகுதி தொடர்பான தகவல்களையும் தெரிவிக்கவில்லை. ஆகவே, இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்க கூடாது. மேலும் இத்திட்டத்தை கைவிட வேண்டும்.

**22. திரு. அருணாசலம், சுற்றுச்சூழல் ஆர்வலர்**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை துரிதமாக தயாரிக்கப்பட்டதால் இதில் எந்த விதமான விஞ்ஞான பூர்வமான ஆதாரம் இல்லை. இத்திட்டத்தினால் சுற்றுச்சூழல் பாதிக்கும். மேலும், மக்களை ஏமாற்றும் திட்டமாகும்.

**23. திருமதி. சசிகலா, சென்னை**

இத்திட்டம் கால்நடை வளம் மற்றும் மீன்பிடி தொழில் ஆகியவற்றை பாதிக்கும். எனவே, இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**24. திருமதி. கௌரி, கடப்பாக்கம்**

இத்திட்டம் மீன்பிடி தொழில் மற்றும் இடைக்கழிநாடு பகுதியில் உள்ள விவசாயத்தை பாதிப்பதால் இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**25. திரு. கௌரிலிங்கம், ஈச்சம்பாக்கம்**

இத்திட்டத்தினால் மீனவ சமுதாயம் பெரிதும் பாதிப்படையும் மற்றும் கடலரிப்பு உண்டாவதற்கு வகை செய்யும். அத்தகைய கடலரிப்பு, கல்பாக்கம் அணுமின் நிலைய பகுதியையே பாதிப்புக்குள்ளாக்கும். எனவே, இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**26. திருமதி. உஷாராணி**

இத்திட்டம் விவசாய நிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**27. திரு. கோபி பேனர்ஜி, பாண்டிச்சேரி**

இத்திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இடம் Ecological sensitive பகுதியில் அமைந்துள்ளபடியாலும், கடல்நீர் உள் ஊடுருவுவதால் விவசாய நிலங்கள் பாதிப்படையும். எனவே இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் துறைமுகம் மற்றும் நிலக்கரி கையாளுவதை குறிப்பிடப்படவில்லை.

**28. திருமதி. காந்திமதி, கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு**

இந்த திட்டத்தினால் செய்யூர் – கழுவேலி பாதிப்படைவதால் வேடந்தாங்கல் சரணாலயத்திற்கு வந்து செல்லும் பறவைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மற்றும் உள்ளூர் மக்களுக்கு உணவு ப ற்றாக்குறை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் நிலக்கரி கையாளுதல் துறைமுக பகுதி மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலம் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே இத்திட்டத்தினை எதிர்க்கிறோம்.

**29. திருமதி. வெண்ணிலா, காஞ்சிபுரம்**

இத்திட்டத்தை செயல்படுத்தும்போது கடலின் ஆழத்தை அதிகப்படுத்த வேண்டியிருப்பதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும். எனவே இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**30. திரு. இளங்கோ, காஞ்சிபுரம்**

இத்திட்டம் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதால் இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**31. திரு. அருங்குணம் விநாயகம்**

இத்திட்டத்தினால் உப்பளங்கள் மற்றும் இடைக்கழிநாடு பகுதியில் உள்ள விவசாயம் பாதிக்கும். மேய்க்கால் நிலங்களை கையகப்படுத்துவதால் கால்நடை வளம் பாதிக்கும். ஆதலால் இத்திட்டத்தை சென்னைக்கு அருகே உள்ள கோவளத்தில் செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். சுற்று ச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய இத்திட்டத்தை எதிர்க்கிறேன்.

**32. திரு. சி. இரமேஷ், தேவராஜபுரம்**

இத்திட்டத்தை வரவேற்கிறோம். சுற்றுச் சூழலுக்கு பதிப்பு ஏற்படுத்தாத வகையில் இத்திட்டத்தினை நிறைவேற்றப்பட வேண்டும்.

**33. திரு. சரவணன், செய்யூர்**

உள்ளூர் மக்களாகிய நாங்கள் இத்திட்டத்தை வரவேற்கிறோம். வெளியூர் மக்கள் இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள். இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**34. திரு. சுந்தரமூர்த்தி**

இத்திட்டத்தை வரவேற்கிறோம். எங்களுக்கு மூன்று வேளை சாப்பாடு, நிம்மதியான உறக்கம், தங்குவதற்கு மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டும்.

**35. திரு. ராமலிங்கம், வெடால்**

விவசாய நிலங்களை கையகப்படுத்தும்போது நிலத்திற்கு தக்க விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கோவில் நிலங்களை கையகப்படுத்தும்போது அதற்கு ஈடாக தகுந்த மாற்று நிலங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

**36. திரு. செந்தில், இடைக்கழிநாடு**

வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் இத்திட்டத்தினை ஆதரிக்கிறோம்.

**37. திரு. மதன் பிரசாத், வடக்கு செய்யூர்**

உரிய வேலை வாய்ப்பு அளிக்கும் பட்சத்தில் இத்திட்டத்தை வரவேற்கிறோம்.

**38. திரு. ஜெரோம், செய்யூர்**

இத்திட்டத்தை ஆதரிக்கிறோம். நிலத்தை கையகப்படுத்தும் போது நிலத்திற்கு உரிய ஈட்டுதொகை வழங்க வேண்டும்.

**39. திருமதி. இந்திரா**

இத்திட்டத்தை எதிர்க்கிறோம்.

**40. திரு. பாலு**

படித்த இளைஞர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பு தர வேண்டும்.

இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டம் குறித்து பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து கூட்டத்தினை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, பொது மக்களிடம் எழுத்து பூர்வமாக பெறப்பட்ட கருத்துக்கள் (எண்ணிக்கை – 284) நிகழ்ச்சியை பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.